## உயிர்கள் இலவசமாய்

உறையும் இடம்;
உலகம்.
உழுவதற்கு மண்ணுண்டு
தழுவதற்க்கு துணையுண்டு ;
முழுப்பொருளாய்
ஆகுதற்கும் வழியுண்டு;
எழுதுவதற்கு ஏலாது
யாரவன் தலைவன்?
மழையுண்டு வெயிலுண்டு
பிழையுண்டு
பிழையற்றதும் உண்டு.
உறவுண்டு பிரிவுண்டு
உணர்வுண்டு
உள்ளமென்று ஒன்று உண்டு;
எல்லாமும் உண்டு
ஆனால்
எதுவும் நமக்கு சொந்தமில்லை.
இருளுண்டு பகலுண்டு
இரண்டுமே கலந்ததும் உண்டு.
உருள்கின்ற உலகத்தினில்
மருள்கின்ற மனமும் உண்டு.
வருகின்ற யாவும்
வந்தது யாவும்
எதுவும் சொந்தமானதில்லை.
எல்லாமும் உண்டிங்கு
அனுபவிக்கலாம்
ஆனால்
எதுவும் சொந்தமானதில்லை .
எல்லாமும்
இலவச இணைப்புகள்;
எதுவும் உங்கள்
சொந்தமானதில்லை.
அவ்வாறெனின்
நான் யார்?
உன்னை அறிய
கொடுக்கப்பட்ட
இலவசங்கள் இவை.
உன்னை நீ அறிந்தால்
இலவசங்களெல்லாம்
இறை கொடுத்த
உதவி தொகை;
அறிவாய் மனதே!
தணிகை ராஜகோபால்
15-10-2022

--------------------------------------

## பெற்றோரில்லை! உற்றோரில்லை!

அங்காடி நாயென; அலைகின்றேன்!
தூய அன்புக்காய்;
பட்டு போன மரத்தினில்,
பறவைகள் அமர்வதில்லை!

கெட்டுப்போனவனிடம்,
உறவுகள் தீண்டுவதில்லை;
இற்றுப்போன கயிறாகிவிட்டது;
என்று அறுந்திடுமோ ?

சற்றே இளைப்பாற குட்டிச்சுவர்
போதும்
வற்றிய வயிறுக்கு கிடைப்பதெல்லாம்
விருந்தே;
முற்றிய மௌனமே தாய் மொழியாம்;
பற்றற்ற மனதோடு,
பரம்பொருள் உன்னைப் பற்றினேன்;
எற்றியந்த எமன் உதைக்கு முன்னே
சற்றே கருணை காட்டு
முற்றும் நா தழும்பாகட்டும்
மோனிலையோனே நின் நாமாவால்.
**தணிகை ராஜகோபால்** - 01.08.2022

------------------------------------

## மனித நேயம் காலமாகி

வெகு நாட்களாகிவிட்டது ;
வாய்க்கரிசி போடுவாரில்லை;
பாலூற்றுவாரில்லை;
எரிக்க யாருமின்றி
புதைத்துவிட்டார்கள்!
$$$
பணம் தின்னி கழுகுகள்
அதிகமாய் பறக்கின்றன ;
நிணம் தின்று
நிதம் தின்று
கொழுந்துவிட்டன !
$$$
பெற்ற தாயை
முதியோர் இல்லத்தில்
தள்ளிவிட்டு
மற்றவர் தாய்க்கு
விருந்தோம்புகின்றனர் !
$$$
ஜாதியில்லை ஜாதியில்லை
எனச்சொல்லி சொல்லி
ஜாதிகளை வைத்து
பிழைக்கிறார்கள்!
$$$
நீதிகளெல்லாம்
நாதியற்று நடுத்தெருவில்
விற்கப்படுகின்றன!
$$$
வெட்கமில்லை மானமில்லை
ஈனமில்லை;
வீதிகளில் மதங்களை
கூவி கூவி
விற்கிறார்கள் !
$$$
வன்முறைகள் வாய் சவடால்கள்

தேசிய கீதங்களாகி விட்டன;
தெரு முற்றங்கள்
பண வேசிகளின்
இல்லங்களாகிவிட்டன !
$$$
குணமென்னும் குன்றினை
கண்டால்
'குவாரி' ஆகிவிடுகிறார்கள்!
$$$
தெருக்களில் பிச்சையெடுத்து
தின்ற பல நாய்கள்
தன்னிலை படுத்த
தரம் தாழ்கின்றன !
$$$
ரத்தத்தின் நிறம் சிவப்பு
நமக்கு நாமே பொறுப்பு !!
$ 05-1-2022------**தணிகை ராஜகோபால்**
---------------------------------------

### அன்பு கிடைக்குமா ?

அன்பு;
இங்கும் அங்கும்
தேடித்திரிந்தும்....
கிடைக்கவில்லை?
பிரிய வாசகரே
சொல்லுங்களேன்;
அன்பு கிடைக்குமா
அன்பு ;
தன் ரத்தம்
தன் சதை
என்பதால்
தாயின்
அன்பு;
தன் விந்தணுவின்
விஸ்வரூப
தரிசனம் என்பதால்
தந்தையின்
அன்பு;
கிளி ஜோஸ்யக்காரனின்
நெல்மணி போன்றது
மனைவியின்
அன்பு;
அற்றகுளத்து
அறுநீர் பறவைகள்
போன்றது
சகோதர அன்பு;
அன்பு கிடைக்குமா
அன்பு;
சூரியனும் மலர்களும்
கொண்ட அன்பு;
மலர்களும் தேனீக்களும்
கொண்ட அன்பு;
அலைகளும் கரைகளும்
கொண்ட அன்பு;
வானும் கடலும்
கொண்ட அன்பு;
கிடைக்குமா?
என் பிரிய வாசகரே
சொல்லுங்களேன்
அன்பு கிடைக்குமா
அன்பு?
**தணிகை ராஜகோபால்**
--- ----------------------

### நண்பனே

என்னை சிறகாக்கிக்கொள்
உன்
கவலைகளுக்கு.
உன்
மனபாரத்தை
சுமந்துகொண்டு
ஏன்
இந்த அவஸ்தை;
உன்
உதவிக்காக
சாலையோரம்
நின்றிருக்கிறேன்
சுமைதாங்கியாய்.
அந்தக் கவலையேனும்
துளைக்கருவியை
என் பக்கம் திருப்பிவிடு
நான்
தாங்கி கொள்கிறேன்.
ஊருக்குப் போகச்சொன்னால்
சுடுகாட்டிற்கு
செல்கிறாயே ?
வழி தெரியவில்லையா?
வா
உடன்பிறந்தானாய்
அழைத்துச்செல்கிறேன்.
உடன் பிறந்த
நிழலாய் நானிருக்க
எதை கண்டு
அச்சம்?
நண்பா
நாமிருவரும்
நட்புக்கு
இலக்கணம் என்றால்
எனக்கு
உன் கவலைகளை
பரிசாக
தாயேன் .
வா நண்பா
நம்பிக்கையெனும்
அமிர்தம் தருகிறேன்;
உதறிவிடு கவலைகளை;

எழுந்திடு
வானம் தொட;
வா கைகொடு
வாகை சூட.
ஏன்
இன்னும் சந்தேகமா ?
நான்
தேவனா அல்லது
மனிதனா என்று ?
கவலைப்படாதே
நான்
தீந்தமிழ் கவிஞன்.
**தணிகை ராஜகோபால்**

--------------------------------

## உரத்து சொல்லுங்கள்...

சந்தோஷத்தையா?
தேவையில்லை
பார்த்தாலே பற்றி கொள்ளும்
தோற்று கிருமி.
இல்லை
சோகத்தையா ?
சோகம் சுகமென்றாலும்
சுற்றியுள்ளவர்க்கு
அச்சமூட்டுவது!
வேறு எதை
உரத்து சொல்வது?
உரத்துச்சொல்லு
மரத்துப் போன நெஞ்சங்களுக்கு
தன்னம்பிக்கையை;
சிறுத்துப் போன இதயங்களுக்கு
நீள் விசும்பை;
கறுத்துப் போன உள்ளங்களுக்கு
சூரியனை;
கொதிக்கின்ற மனங்களுக்கு
குளிர் நிலவை !
உரத்துச்சொல்லு
மரத்து சிறுத்து கறுத்து
கொதிக்கின்ற மனங்களுக்கு
அன்பை
அன்பை
அன்பை!
**தணிகை ராஜகோபால்**

-------------------------------------

## தனித்திரு தனித்திரு

தன்னை தான் தரிசனம் செய்ய
தனித்திரு;
பசித்திரு பசித்திரு
ஞானப்பழம் புசிக்கும் வரை
பசித்திரு;
விழித்திரு விழித்திரு
உன்னை நீ காணும் வரை
விழித்திரு;
வசிக்கும் இடமெல்லாம்
வந்த சொந்தமில்லை
பசிக்கையில் கிடைப்பதேல்லாம்
ருசிப்பதற்கானதில்லை;
நிசி நாய்களாய் இலக்கில்லாது
திரிந்து பயனுமில்லை
கசிந்துருகி துக்கத்தில்
கண்ணீர் விடவேண்டியதுமில்லை;
அசிந்தையோடு அசைவுமின்றி
ஆர்வமோடு உள்ளே பார்த்தால்
அணையா விளக்கு தெரியும்
உன் துணை நீயேஎன்று
உனக்குப் புரியும்.
**தணிகை ராஜகோபால்**

-------------------------------------

## துன்பங்களின் அணிவகுப்பு

இன்பங்களை நோக்கித்தான்
இடி மின்னல் யாவும்
மழை பொழியத்தான் .
வாழ்வில் வெறுமை
வேறெதற்குமில்லை
தாழ்மை பொறுமை
கற்று தந்து
வாழ்வினில் இன்பம்
நிறைப்பதற்குத்தான்.
முட்கள் வலி தரும் - அவை
காலக்கடிகையின் முட்கள்
முட்டித்தள்ளி செல்வது
ரோஜா மலர் தோட்டத்திற்குத்தான்.
வலியும் இன்பம்தான் - மேலும்
நம்மை வலிவாக்குவதால்.
வாழ்க்கையும் சுகம்தான் - மேலும்
போராடப் போராடத்தான்.
**தணிகை ராஜகோபால்**

------------------------------------

மிச்சமில்லே மீதியில்லே
உச்சிவரை துன்பமிங்கே
வாடா வாடா - என்
தோழா
வாடி வாடி - என்
தோழி.
அச்சம்விட்டு நாணம் விட்டு
ஆபிஸிலே அடிமைப்பட்டு
வச்சக் கடன் தீரவில்லே வரவதுவும்
ஏறவில்லே தோழா.
அச்சடித்த தாளுக்காக
இச்சகத்தில் ஓடும் ஓட்டம்
எச்சை இலை கண்ட அந்த
பிச்சைக்காரன் ஆடும்
ஆட்டம் தோழி.
**தணிகை ராஜகோபால்**

--------------------------------------

## அன்பு செய் அன்பு செய்

அன்பு செய்யடா மனிதா
அன்பு செய்.
அன்பு செய்வதால்
சிவமாய் வாழ்வாய்
இல்லையெனில்
சவமாய் வாழ்வாய் .
இன்புறு நிலையிலும்
துன்புறு நிலையிலும்
அன்புருவாய் இரு மனிதா.
என்பும் நிணமும் குருதியும்
மண்ணில் மறைந்துவிடும்
அன்பும் கருணையும் நன்றியும்
விண்ணளவு பெயரை தரும்.
அன்பிற்கு நிறமில்லை பேதமில்லை
தூயமழைத் துளி போன்றது.
ஏழையென்றும் செல்வந்தர் என்றும்
பிரித்து பார்க்காதது .
மன்பதை பிறந்தோம்
மனிதனாக பிறந்தோம்
நம் செயல் என்னவெனில்
எல்லோர்க்கும்
அன்பு காட்டுவதே.

**தணிகை ராஜகோபால் .**

-------------------------------------------

## வயதாகி கொண்டிருக்கிறது .......!

வெட்கமாக இருக்கிறது!
மனம் இன்னும்..
ஏனின்னும்
அங்காடி நாயாக அலைகிறது?
எத்தனை முறை
ஞானஸ்னானம் செய்வது?
வெட்கம் பிடுங்குகிறது;
மனமோ இன்னும் அலைகிறது...
ஆசை அறுமின் ஆசை அறுமின்
ஈசனோடு ஆயினும்
ஆசை அறுமின்!
எப்படி!
ஆசை பாசமாகி
இருக்குகிறது;
ஆசை பாசையாகி
சறுக்குகிறது;
எப்படி அறுப்பது?
ஆசையினால்
வேஷங்கள் கோஷங்கள்..
வெட்கமாயிருக்கிறது.
மனம் நாயாய் பேயாய்
அலைகிறது.
பேரின்பங்கள் இருக்க
மறந்து
துன்பங்கள் வாங்க
அலைவதேன்?
ஒன்றை பிரித்து
இரண்டாக்குகிறது .
கரிப்பை இனிப்பாய்
காட்டும்.
நடவாத ஒன்றை
நடக்குமென நம்பவைக்கும்.
அறிந்தும் அறியாதது போல்
அலையவைக்கும்.
வெட்கமாயிருக்கிறது.....
இரண்டு ஒன்றாக வேண்டும் .
மூசுவண்டறை
பொய் கையாக வேண்டும்.
மாசிலா மனம் வேண்டும்.
ஆசையிலா அன்பு வேண்டும் .
இறையே இறையே
என்மனம் நீ உறைகின்ற
இடமாகவேண்டும்.

**தணிகை ராஜகோபால்**

## யானோர் கவிஞன்

காலத்தின் ஆணைகளாம்
பிறப்பு இறப்புக்கு
கட்டுப்படுபவனேயன்றி
பணத்தை தின்னும்
மனித கரையான்களுக்கு
கட்டுப்படுபவனல்லன் .
கற்பனைத் தாகத்திற்கு
கவிதைகளை
குடித்துக்குடித்து
கவிதையாய் ஆகிவிட்டதால்
புவியில் மாந்தர்க்கு
போதையாய் ஆனவன்.
பசுமை நிறைந்த வயல்கள்
வனம் யாவும்
யான் அரசோச்சும்
பூமி.
தென்றல் என் தூதுவன்
தெவிட்டாத தமிழ்
என் தாய்.
மலர்கள்
எனக்கு - என்
பூமியிலுள்ள
செடி கொடிகளெல்லாம்
கட்டும் கப்பங்கள் .
யான்
காலத்தின் கண்ணாடி.
துர்நாற்றங்களை நீக்க
மலர் மணங்களை
விநியோகிப்பவன்.
மலர்கள்
மகரந்தச்சேர்க்கை
நடத்தும் வண்டு .
மலர்த்தேனை மாந்தி மாந்தி
ரீங்காரம் பாடும் இசை பாடகன்.

காற்றின் சங்கீதத்திற்கு
தலையசைத்து ரசிக்கும்
மரமெனும் ரசிகன்.
பூமியில் காலூன்றி
விண்வரை படர்ந்து
நிழல் தரும்
கற்பகத்தரு யான்.
அல்லதை விலக்கி
நல்லதை தரும்
கார்முகில் யான்.
யானோர் தாய்
யான் பெறும்
கவிக்குழந்தைகளை
கட்டுப்படுத்த எந்த அரசாங்கத்திற்கும்
தைரியம் கிடையாது! ஏன் ?
யான் என் பேனா மூக்கால்
விடும் கவிக்கனல் மூச்சுகள்;
அவர்களை எரித்துவிடும்,
என்பதால்!
கருப்படு பொருளை
உருப்படவைக்கும்
கவிஞனின் வழித்தோன்றல் யான்
அறிவீர்.

**தணிகை ராஜகோபால்**

-----------------------------------

**சின்னஞ்சிறு குயில்கள்**

சிறகடித்தன
என்னைக் கண்டதுமே
தன்னருங்காதலன்
வந்துவிட்டானென்று !
வண்ண நிறங்காட்டி
வானவில்லொன்று
கண்ணடித்தது என்னை கண்டு
வண்ண தமிழால் எழுதானோ
கவிதையொன்று என்று !

பச்சைப்புல் பட்டினில்
நின்றிருந்த மயிலொன்று
இச்சையுற்றது என்னை கண்டு
இச்சகம் மயங்கும்படி
ஆடலுற்றது கவிதைக்காய்!
காதல் கிளி இரண்டு
முத்தமொன்று கொடுத்திருக்க
நாதன் என் வரவை கண்டு
காதலோடு தோளிலமர்ந்து
கொஞ்சியது தமிழ் கவிதைக்காய்!
இயற்கை எழில்களெல்லாம்
எந்தமிழ்க் கவிகளுக்காகி
மயக்கத்தோடு காத்திருக்க
குயவனின் சக்கரம் போல்
மனம் சுற்றலாயிற்று!
தாயின் அரவணைப்பாய்
நிழல் தந்தது புன்னை மரம்
தாயின் மடி ஆனது ;
பாய்ந்தோடும் வேர்கள்
படுக்கை ஆகி கவிதை
பிரசவமானது!!

**தணிகை ராஜகோபால்**

-----------------------------------

**இளமை கடந்து போனது**

இனிமை மறந்து போனது
வளமை வடிந்து போனது
வாழ்வு புரியலானது
களவு கரைந்து போனது
கலவியும் மறந்து போனது
உள வியல் வசமானது
உண்மைகள் புரியலானது
விளைவுகள் அறிந்துவிட்டது
வினைகளை அறுத்துவிட்டது
முளை விட்டாகிவிட்டது முதுமை
முன்னிலும் உறுதியானது மனமே
தளையல்ல வரும் முதுமை
தேய்பிறையல்ல முதுமை
களையல்லவே இந்த முதுமை
வளர்பிறையே இந்த முதுமை.

**தணிகை ராஜகோபால் .**

-----------------------------------

**சிறிய மலர் :**

அக்கினிகுஞ்சை கண்டு
அதை என் வயிற்றினில்
வைத்தது விதி ;
பற்றி எரிந்தது வயிறு - அதற்கு
பசியென்பதே பேரு.

**தணிகை ராஜகோபால்**

---------------------------

**எல்லோரும் நன்றாக இருக்கிறார்கள்**

எல்லாமும் நன்றாக இருக்கிறது ;
நில்லாமல் ஓடுகிறது உலகம்
நிற்பவை ஏதும் இல்லை - இங்கு
மல்லிகை வாசம் போல
மனத்திலும் இளமை வாசம்;
நெல்லினுள் அரிசி போல
நெஞ்சுக்குள் பழைய வாசம்.

**தணிகை ராஜகோபால்**

--------------------------

**பேசுதலின் பேசாமை நன்று;**

கூசாத நாவினிலே
கூசுகின்ற வார்த்தைகள்.
கூவம் கரையோரம்
சந்தனச் சேற்றை தேடும்
வார்த்தை வியாபாரிகள் ;
மின்மினிகளை
பிடித்து வைத்து
சூரியனை எதிர்க்கும் மதர்ப்பு.
மாசு படிந்த உள்ளத்திலிருந்து
வெளிவரும்

தூசு படிந்த பண்டம் பேச்சு;
காசு பணம் தேடி,
சாமரம் வீசும் நாக்கு.
தேடுவது கிடைக்குமெனில்,
தேனூர தேடும் ;
கிடைக்காவிடில்,
வேசித்தனமாய் ஆடும் நாக்கு!
நாக்கு உடலில்,
ஓர் அங்கம் ;
நினைத்தால்
உணர்ந்தால்
நீ அதனின் எஜமானன் !
**தணிகை ராஜகோபால்**
---------------------------------

## எங்கோ போகிறார்கள்

ஏன்?
எதற்கு?
இருப்பது
இறப்பது
பற்றாது
எங்கோ போகிறார்கள்...
பசி தரும்
யாத்திரைகள்
ருசி தரும்
யாத்திரைகள்....
கவலைபடாது
எங்கோ போகிறார்கள்...
ஏழை
கூழுக்கு அலைந்தாலென்ன?
கூழே
கோபுரத்திற்கு
அலைந்தாலென்ன?
கிழவி
பழையதிற்கு
புலம்பினாலென்ன?
எங்கோ போகிறார்கள்...
தம்
இருப்பை மறந்து;
தம்
இறப்பை மறந்து;
இருந்த
கருப்பை மறந்து;
செருக்கினில்
எங்கோ போகிறார்கள்...
எங்கோ போகிறார்கள்...!
எங்கு?
எதற்கு?
எங்கோ போகிறவர்கள்;
நிலைக்கு வரும் பொழுது,
ஏதும் புரியாது!
மீண்டும்,
எங்கோ போகிறார்கள்...!
நீருக்கும் நெருப்புக்கும்
உள்ள உறவை
உணர்ந்த பின்;
ஏதும் நானறியேன் ...!
**தணிகை ராஜகோபால்**
-----------------------------

## அதிசயமாய் இருக்கிறது

என்னை நான்
பார்க்கும் பொழுது.
கவிதை வாசித்து
கவிதை எழுதுகையில்
கவிஞ்சனா.
கொட்டோவியமோ
கோலமொவியமோ
உணர்வோடு ஊர்கையில்
ஓவியனோ?
வாழ்வியல்
படிக்கும் பொழுது
சீழ்க்கையோடு
சிறகடிக்கும்
சிறுகுருவியோ?
உணர்சிகளின்
ஓவியங்களில் மயங்காத
மனிதனோ?
தெரிந்தெடுத்த நூல்களை
தேர்ந்தெடுத்து ஓதும்
மாணவனோ?
பரிசல் இல்லாமல்
ஆற்றை க் கடக்க
முயலும்
பைத்தியமோ?
மனதை விற்று
பணம் பார்க்கும்
உயிர்கட்கு
எதிரியா?
கொள்கையுமில்லாது
குறியும் இல்லாது
வெற்றாக உலவும்
வெண் முகிலோ?
கேள்விகள்
அதிகம்தான்
விடை?
**தணிகை ராஜகோபால்**
------------------------------

## வெளியை தேடுபவனுக்கு

வேலிகள் தேவையில்லை!.
நாம்,
வெள்ளாடுகள் இல்லை,
தேடுதல் முனைப்பு
எல்லாவற்றிலும் இருக்க!
வேலிகள் வேஷமாகிவிடும்;
களி தின்ன ஆசைஎனில்,
கேழ்வரகைத் தேடு!

உளி கொண்டு,
சிற்பம் செய்ய;
உளிகளைத் தேடு!

வெளித் தேடுபவனுக்குஆபரணங்கள்
போன்றது, வேலிகள்.
வேஷங்களைக் களைய களைய,
'நான்' தெரியும்!.
**தணிகை ராஜகோபால்**
-----------------------------

**இறந்ததைப் போல்**
உணர்கிறேன் ;
என் கண்கள்
எழுத்தை வாசிக்காத பொழுது.
இறந்தவனைப் போல்
உணர்கிறேன்;
எழுத்தை
ருசிக்காத பொழுது.
இறப்பு என்பது
இருப்பது இல்லாதாவது ;
படிப்பு என்பது
இல்லாதது
இருப்பதாவது.
கல் என்றால்
கல்லினும்
பொறுமை வேண்டும்;
கற்பது ஆன்மாவிற்கு
உணவு.
இறந்ததை போல்
உணர்கிறேன்;
எழுத்தை
மீட்டாத பொழுது;
மீட்டுதல் உருருவாக்கும்
சங்கீதம்
ஆன்மாவின் உணவு .
**தணிகை ராஜகோபால்**
---------------------------

**சூரியன்**
நீ முன்னே செல்கையில்
பின்னே வருகிறது நிழல்
அது காலை.
நீ பின்னே வருகையில்
முன்னே செல்கிறது நிழல்
அது மாலை.
நடுப்பகலோ
நிழல் என்னோடு ஒடுங்குகிறது!
என்னோடு நான்,
ஒடுங்குவது எந்த நாள்?
**தணிகை ராஜகோபால்**
---------------------

1980 இல் பெங்களூருவில் ஒரு
விடியற்காலை: -
அல்லெனும் காதலியை
புணர்ந்த கள்வன்
சில்லென்ற மெக சேலையுள்
உறங்கினான் - கண்டு
கொல்லென சிரித்தன காண்
புள்ளினம்
கள்ளுண்ட வண்டென
இருந்தவன் விழித்தனன் - எழுந்து
மெல்லிய பனித்திரை
விலக்கி வந்தனன்
மெல்லிய நாணத்துடன்
பல்லை இளித்தனன்.
**தணிகை ராஜகோபால்**
----------------------------

**பெண்ணே பெருந்தெய்வம்**
பெண்ணே தாயவள்
பெண்ணே சகோதரியுமாம்
பெண்ணே மந்திரி
ஔன்னே ராணி
பெண்ணே வேசியுமாம்
பெண்ணே சக்தி
பெண்ணே ஆக்குபவள்
பெண்ணே அழிப்பவளுமாம்
பெண்ணே இன்பம்
பெண்ணே துன்பம்
பெண்ணே மேன்மை
பெண்ணே மேன்மையுமாம்
பேணி பூமி
பெண்ணே கடல்
பெண்ணே சொர்க்கம்
பெண்ணே நரகமுமாம்
பெண்ணே இசை
பெண்ணே வசையுமாம்
மண்ணில் அனைத்துமே
பெண் எனில்
ஆண் யார் ?
**தணிகை ராஜகோபால்**
-------------------

நின் நாமம் சொல்லி சொல்லி
என் நா தடித்திட வேண்டும்
நின் பெருமை பேசி பேசி
என் மனம் பூரிக்க வேண்டும்
நின் அழகை கண்டு கண்டு
என் நினைவெல்லாம் நீயாகவேண்டும்
நின் வீரத்தை கேட்டு கேட்டு
எனை வெல்லும் வீரம் வேண்டும்
நின் ஞான பெருக்கினை உணர்ந்து
என் உள்ளம் அடிமையாகவேண்டும்
நின் இருப்பு எங்கும் இருக்கையில்
என் எனது என சொல்ல நான் யார்?
**தணிகை ராஜகோபால்**